பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆவணி 7 றமழான் 7 இதழ் 192
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-8-77

# திருமலையில் 34 மணிநேர ஊரடங்கு

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நாடு பூராவும் அமுல்செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம், நேற்றுக் காலை 4 மணிக்குத் தளர்த்தப்பட்டுப் பின்னர் மீண்டும் நேற்றிரவு 8 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நாடு முழுவதும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு இன்று அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்பட்டது.

ஆனால் திருகோணமலையில் நேற்றிரவு 8 மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம், தொடர்ந்து இன்று பூராவும் அமுலில் இருக்கும். திருகோணமலையில் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்குத்தான் தளர்த்தப்படும். திருகோணமலையில் 34 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிறது.

## உணவுப்பொருள் சேகரிப்பு

வண்ணார்பண்ணை, திங்.

வடமாகாணத்திற்கு வெளியிலிருந்து பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளுக்கு உணவு கொடுப்பதற்கென உணவுப் பொருட்கள் சேகரிக்கும் வேலைகளில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணப்பகுதியில் வீடு வீடாக இப்பொருட்களை சேகரித்து வருகின்றனர்.

நேற்று காலை சேர்க்கப்பட்ட பொருட்கள் வாகனங்களில் கொண்டு சென்று மேற்படி வித்தியாலயத்தில் இறக்கப்பட்டது.

......

## துப்பாக்கிகள் திருட்டு!

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றத்தின் பாதுகாப்பு அறை ஒன்று உட்பட பல்வேறு இடங்களிலிருந்தும் ஒரு கைத்துப்பாக்கி உட்பட பத்துக்கு மேற்பட்ட துப்பாக்கிகள் களவாடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

**கார் தீக்கிரை**

யாழ்ப்பாணப்பகுதியில் ஒரு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக்காரியாலயப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஒருவருடைய மோட்டார்காருக்குத் தீவைத்துச்சேதம் ஏற்படுத்தப்பட்டதாகவும் புகார் செய்யப்

(4ம் பக்கம் பார்க்க)

# அகதிகளைக் கப்பலில் அனுப்ப ஏற்பாடு!

# இந்தியப் பிரஜைகள் பற்றி இந்திய அரசு அக்கறை!

## யாழ்நகர் வழமைக்கு திரும்புகிறது

**கொழும்பு நகருக்கு வெளியேயும், சுற்றுப்புறப் பகுதிகளிலும் கலவரங்களால் பாதிக்கப்பட்டு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், கொழும்பு இந்துக் கல்லூரியிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள மக்களை யாழ்ப்பாணத்திற்குக் கப்பலில் கொண்டுவந்து சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.**

கொழும்பில் தங்கியிருந்து கலவரநிலை சம்பந்தமாகப் பிரதமருடன் அடிக்கடி தொடர்பு கொண்டுவரும் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம், அகதிகளை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

கப்பலில் அகதிகளை அனுப்புவதற்குப் பிரதமரும் சம்மதம் தெரிவித்ததாகவும், ஆனல் உடனடியாக அவர்களை அனுப்புவதற்குக் கப்பல் வசதியில்லையென்றும், இதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் செய்யப்படுவதாகவும் அறியப்படுகிறது.

இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் சரஸ்வதி மண்டபத்தில் இப்போது அகதிகளாக இருப்பதாகவும், இவர்களுக்கு உணவு வசதிகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் வசதி கிடைக்கும் வரை கொழும்பிலிருந்து விசேஷ புகையிரதத்தில் அகதிகளை அனுப்புவதற்கும் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

ஆறு தினங்களின் பின் யாழ்ப்பாணநகரம் வழமையான நிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் அதேநேரம் வெளியூர்களிலிருந்து அகதிகளாகத் திரும்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உணவும் மற்றும் வசதிகளும் அளித்து அவரவர்களை அவர்களது சொந்தஇடங்களுக்கு அனுப்பிவைக்கும் வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**நாடுமுழுவதும் முப்பத்திஆறுமணிநேரம் ஊரடங்கியிருந்த பின்னர் சில பகுதிகளில் நிலைமை கட்டுக்கடங்கியிருந்தபோதிலும் வேறு இடங்களில் மீண்டும் கொள்ளையடித்தல், தீவைத்தல் போன்ற வன்செயல்கள் தலைதூக்கியதால் மீண்டும் இரவு எட்டு மணிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

## வந்து குவியும் அகதிகள்

யாழ்ப்பாணத்தில் அகதிகள் முகமாக மாற்றப்பட்டிருக்கும் யாழ். கனகரெத்தினம் மகா வித்தியாலயத்துக்குப் பல்வேறிடங்களிலிருந்தும் பஸ்களிலும், லொறிகளிலும் மோட்டார் கார்களிலுமாக அகதிகள் வந்தவண்ணமிருக்கின்றனர். அவர்கள் வந்துசேர்ந்ததும் அவர்களுக்கு உணவளித்து அவசியமானவர்களுக்கு வைத்திய உதவியும் அளிக்கப்பட்டுப் பின்னர் உடனுக்குடன் அவரவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

## வவுனியாவிலிருந்து அகதிகள்!

வவுனியாவில் கடைகள் தாக்கப்பட்டதுடன் வீடுகளும் தாக்கப்பட்டதாகவும் மக்களும் தாக்கப்படுவதாகவும் தெரிவித்து வவுனியாப் பகுதிகளிலிருந்தும் பலர் யாழ்ப்பாணத்துக்கு அகதிகளாகவந்துகொண்டிருக்கின்றனர். பொலிசாரே தங்களைத்தாக்கியதுடன் கடைகளுக்கும் தீவைத்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். வவுனியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக மேலும் இராணுவத்தினர் இன்று வவுனியா வந்திறங்கினர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. கொள்ளையடித்தல், தீவைத்தல் போன்ற வன்செயல்களில் ஈடுபடுவோரைக் கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளும்படி பொலிசாருக்கும் ஆயுதப்படையினருக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

## கடந்தவார அரிசியையும் வாங்கலாம்

கொழும்பு, திங்கள்

ஊரடங்குச்சட்டம் காரணமாக கடந்த வாரம் கூப்பனுக்குஅரிசிபெற்றுக் கொள்ள முடியாதவர்கள் இம்மாதம் 28-ம் திகதி வரையில் தமது கூப்பன் அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உணவு அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

## பாரத அரசு கோரிக்கை

புதுடில்லி, ஆக. 22

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் நலன்களைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளும்படி இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இலங்கையின் பல பகுதிகளிலும் குறிப்பாக மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளிலும் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் காரியதரிசி புதுடில்லியிலுள்ள இந்திய ஹைகமிஷனரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இச்சந்திப்பின் போது இலங்கையில் நிகழ்ந்து வரும் வன்முறைச் சம்பவங்களினல் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருவதாகவும் இவர்களைப் பாதுகாக்க இலங்கை அரசு சகலநடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்திய அரசு அதிகாரி வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது

இலங்கை வாழ் இந்தியர்களின் நலன் காக்கப்படவேண்டுமென்றும் இது குறித்து இலங்கை அரசுடன் தொடர்பு கொள்ளுமாறும் இலங்கையில் உள்ள இந்திய ஹைகமிஷன் இந்திய அரசினல் கேட்கப்பட்டுள்ளது.

# அரசு ஊழியர்கள் இன்று வேலைக்கு செல்வர்

வண்ணார்பண்ணை, செவ்.

தொழிற்சங்கங்களின் கூட்டணி நேற்றுக் கூடி எடுத்த முடிவின்படி இன்று அரசாங்க ஊழியர்கள் வேலைக்குத் திரும்பவிருக்கின்றனர்.

நேற்றுக் காலை தொழிற்சங்க கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி டி. ஐ. ஜி. திரு. ருத்திரா ராஜசிங்கத்திற்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் பிரகாரம் தொழிற்சங்க ஊழியர்கள் வேலைக்குத் திரும்பவுள்ளனர்.

தொழிற் சங்கங்களின் கூட்டணி இணைச்செயலாளர்களான திரு. வே. பொன்னம்பலம், திரு. இ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இதுபற்றி அறிக்கை ஒன்றையும் கூட்டாக விடுத்துள்ளனர்.

தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்ட இப்பேச்சுவார்த்தையின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் சி. கதிரவேலுப்பிள்ளை, வெ. யோகேஸ்வரன், வ. ந நவரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர். அதிகாரிகள் தரப்பில் டி. ஐ. ஜி திரு. ருத்திரா ராஜசிங்கம், எஸ். பி. திரு ஆர். சுந்தரலிங்கம் ஆகியோரும் மற்றும் சில அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**தொழிற்சங்க அறிக்கை**

இப்பேச்சுவார்த்தைகள் முடிவில் தொழிற்சங்க கூட்டணியினர் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

''யாழ். நகரில் பொலிஸாரினுல் ஏற்படுத்தப்பட்ட அசம்பாவித சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவும், அது தொடர்பாக அதிகாரிகள் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்தும் சில அதிகாரிகளுக்கு எதிராக நட

(4-ம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் கிராமசபை
## கேள்வி விளம்பரம்

கோப்பாய் கிராமசபை விசேட ஆணையாளரால் கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகட்கு சீல் வைத்த கேள்விகள் 2-9-77-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 5000/-க்கு மேல் பதிவுள்ள ஒப்பந்தகாரர்கட்கு மட்டும் 30-8-77-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரைக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படும்

| வேலையின் விபரம் | கேள்விப் பிணை | கேள்விப் பத்திர பணம் |
|---|---|---|
| ........... | ........... | ........... |
| 1. கோப்பாய் சந்தைக் கட்டிடம் | 100-00 | 10-00 |
| 2. சரவணபவானந்த வித்தியாலய கிணறு | 40-00 | 10-00 |

மேலதிக விபரங்களை கிராமசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. யோகீஸ்வரர்,
விசேட ஆணையாளருக்காக.

கிராமசபை அலுவலகம்,
கோப்பாய்,
15-8-77. 6885



## வாகனப் போக்குவரத்து அறிவித்தல்

### 1977-ல் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவவிழா

மேற்படி விழாவின் பொருட்டாக 19-8-77 தொடக்கம் 15-9-77 வரை உட்பட்ட நாட்களில் கீழ்க்கண்ட வீதிகள் சகலவித வாகனப் போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. பருத்தித்துறை வீதியில் அரசடிச்சந்திக்கும் இரண்டாவது மைல் கல்லுக்கும் இடையிலுள்ள பகுதி.
2. கோவில் வீதியில் பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.
3. செட்டித்தெருவில் பருத்தித்துறை வீதிக்கும் செட்டி ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.

**குறிப்பு:**

வாகனப்போக்குவரத்து மூடப்பட்டிருக்கும் எல்லைக்குள் வசிப்பவர்களுள் தங்கள் சொந்த வாகனங்களை உபயோகிப்பவர்களுக்கும், அரசாங்க கடமையின் நிமித்தம் வாகனங்களில் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிக பொலிஸ் நிலையத்தில் 18-8-77 பிற்பகல் தொடக்கம் விசேஷ போக்குவரத்து அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்குவரத்துக்களில் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பாய் நோக்கிப் போகும்பொழுது அல்லது எதிர்த்திசையில் நாவலர் வீதி, நல்லூர் குறுக்குவீதி முதலியவற்றால் செல்லுதல் வேண்டும்.
2. அரசடி வீதி வழியாக கோப்பாய் நோக்கிப் போகும்போது அல்லது எதிர்த்திசையில் வைமன் வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்றால் செல்லுதல்வேண்டும். வடக்கில் இருந்து தெற்குவரை வைமன்வீதி ஒருவழிப்பாதையாக அமையும். அத்துடன் அரசடி வீதி, மேற்கில் இருந்து கிழக்குவரை (பலாலி வீதியில் இருந்து பருத்தித்துறை வீதிவரை) ஒருவழிப்பாதையாக அமையும்.

### வாகனங்களை நிற்பாட்டி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்காக 4 இடங்கள் ஒதுக்கிவைக்கப்படும். இந் நான்கு இடங்களையும் நன்கு உபயோகிக்குமாறு சாரதிகள் அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

### மேற்படி இடங்களாவன

1. அரசடிவீதி வழியாக கந்தசுவாமி கோவிலுக்குவரும் வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
2. தென்பகுதியில் இருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
3. கோப்பாய்த்திசையில் இருந்துவரும் வாகனங்களை முத்திரைச்சந்தை மைதானத்தில் நிற்பாட்டலாம்.
4. பலாலி றேட்/திருநெல்வேலி வழியாகக் கோவிலுக்கு வரும் வாகனங்களை திருநெல்வேலி சிவன்கோவில் வீதியில் நிற்பாட்டலாம்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர்
யாழ்ப்பாணம் (1)

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-8-77 6884



## ஏஜன்டுகள் தேவை

ஏஜன்டுகள் இல்லாத இடங்களுக்கு 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு முற்பணம் செலுத்தக் கூடிய பத்திரிகை விற்பனையாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
'ஈழநாடு'
63, சிவன்கோவில் மேற்குவீதி
யாழ்ப்பாணம்.


# 3000-க்கும் அதிகமானோர் அகதிகளாகத் திரும்பினர்!

யாழ்ப்பாணம், செவ்.

அனுராதபுரப் பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக 19ம் திகதி வெள்ளிக்கிழமை சுமார் 3000 க்கும் மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை வந்தடைந்தனர்

இவர்களை யாழ்ப்பாணத் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. யோகேஸ்வரனும் யாழ்ப்பாணத்திலுள்ள பல இயக்கங்களையும், சங்கங்களையும், நிறுவனங்களையும் சேர்ந்தவர்களும் வரவேற்று உபசரித்தனர். இங்கு வந்து சேர்ந்தவர்களில் அனுராதபுரம், மிகுந்தலை, கெக்கிராவ ஆகிய பகுதிகளிலிருந்தும் பலர் வந்து சேர்ந்தனர். இவர்களில் அநேகர் காயங்களுடனும் வந்திருந்தனர்.

### பஸ்கள் வந்தன

நேற்று முன்தினம் அதிகாலை நான்கு மணிக்கு முன்பாகவே அகதிகளை ஏற்றி வந்த பஸ்கள் யாழ்ப்பாணம் வந்தடைந்தன. சுமார் 10 பஸ்களில் 800க்கும் மேற்பட்டவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். இவர்களுக்கு சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்பட்டதுடன் அவரவர் வீடுகளுக்கு இ.போ.ச. பஸ்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். அதிகாலையில் இருந்தே அகதிகளாக வரும் தம் உடன் பிறப்புக்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கல்லூரியின் பிரதான வாசலிலும் வீதியிலும் கூடி நின்றனர். நிலைமைகளைச் சமாளிக்கும் பொருட்டும் அத்தியாவசிய அறிவித்தல்களை கொடுக்கும் பொருட்டும் முனாமில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருந்தது. இரண்டாவது தடவையாக வந்த பஸ்கள் சுமார் 2 மணியளவில் வந்து சேர்ந்தபோது தொண்டர்களும் இ.போ.ச. ஊழியர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன.

### சங்கங்களின் சேவை

அகதிகளாக வந்திருந்தவர்களின் நலன்களைப் பேணுவதில் யாழ்ப்பாணச் செயலகத்தைச் சேர்ந்த சமூக சேவைப் பகுதியினரும், யாழ். லயன்ஸ் கழகத்தினரும், யாழ். றோட்டறிக் கழகத்தினரும் இன்னும் 'மில்க்வைற்' ஸ்தாபனம் போன்ற தனியார் நிறுவனங்களும் ஒன்றிணைந்து சேவையில் ஈடுபட்டிருந்தன. அகதிகளாக வந்தோரில் காயப்பட்டவர்களைக் கண்காணிக்கவும் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகவும் யாழ். லயன்ஸ், றோட்டரிக் கழகங்களை சேர்ந்த 10 டாக்டர்கள் பணியாற்றினார்கள். இவர்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த இரு டாக்டர்களும் 4 நேர்சுகளும் பணியாற்றினர். சிறிய காயங்களுடன் வந்தவர்களுக்கு அங்கேயே சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் ஒருசிலர் யாழ். பெரியாஸ்பத்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

### உணவு பரிமாறல்

யாழ். லயன்ஸ் கழகத்தினர் பாலுணவுவகைகளையும் வழங்கினர். அத்தோடு உணவுப்பார்சல்களும் பரிமாறப்பட்டன. றோட்டரிச் சங்க மாதர் பகுதியினர் கல்லூரியில் வைத்தே உணவு தயாரித்து வழங்கினார்கள். இவர்களுடன் பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் தண்ணீர் பந்தல் குழுவினர், கல்வியங்காடு கலைமணி சமூகநிலையத்தினர், மின்சார சபை நல்லூர் கிளையினர் ஆகியோர் உணவுப் பொருட்களையும் மரக்கறி வகைகளையும் கொடுத்துதவினர். தனியார் பலரும் இத்தகைய உதவிகளை வழங்கினர்.

### இ. போ. ச. சேவை

அனுராதபுரப் பகுதியில் அகதிகளாக அனுராதபுரம் கச்சேரியில் தஞ்சம் அடைந்தவர்களை அங்கிருந்து யாழ்ப்பாணம் ஏற்றி வருவதில் யாழ். டிப்போவைச் சேர்ந்த சகல ஊழியர்களும் அக்கறையுடன் ஈடுபட்டிருந்தனர். இ. போ சவை ஊழியர்கள் தாக்கப்பட்டபோதும், தமது உயிருக்கஞ்சாது அநுரதபுரம் சென்று அகதிகளை அழைத்து வந்த ஊழியர்களை யாழ்ப்பாணடிப்போ சுப்பிரிண்டன் திரு என். தியாகராஜா பாராட்டினார். போக்குவரத்து வசதிகள் இல்லாதிருந்த போதிலும் யாழ்டிப் போஊழியர்கள் நடந்தும், சைக்கிளிலும் வந்து தமது கடமையை ஏற்றுக் கொண்டதையும் அவர் குறிப்பிட்டார். இந்த இக்கட்டான நிலையிலும், எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் தங்களது கடமைகளைச் செவ்வனே செய்ததுடன் தகுந்த நேரத்தில் ஒன்றிணைந்து உழைத்த அத்தனை ஊழியர்களுக்கும் தமது நன்றியறிதலை திரு தியாகராஜா தெரிவித்துக் கொண்டார்.

19-ம் திகதியில் இருந்து இன்றுவரை அகதிகள் இலங்கையின் தென்பகுதிகளில் இருந்து வந்த வண்ணமே இருக்கிறார்கள் இதுவரையில் சுமார் 3000-க்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்கள். 21-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நாடெங்கும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்பட்டிருந்தபோதும் யாழ். டிப்போவைச் சேர்ந்த இ.போ.ச. ஊழியர்கள் தொடர்ந்தும் தமது சேவையிலீடுபட்டிருந்தனர் வெளியூர்களில் இருந்து வந்தவர்களில் உறவினர்கள், நண்பர்கள் உள்ளவர்களின் வீடுகளுக்கு அவர்களை அழைத்துச் சென்று ஒப்படைத்தார்கள். அகதிகளாக வந்தவர்கள் எவரிடத்தும் பணம் வசூலிக்கப்படவில்லை. பணம் கொடுக்கின்ற நிலையில் அவர்கள் இல்லாததே இதற்குக் காரணமாகும்,

### பிரமுகர்கள்

அகதிகள் யாழ் நகரை வந்தடைந்தபோது அவர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எம். பிக்களான யாழ்ப்பாண எம். பி. திரு. யோகேஸ்வரன் உடுப்பிட்டி எம். பி. திரு. இராஜலிங்கம், கோப்பாய் எம் பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோருடன் கூட்டணி முக்கிய பிரமுகர்களான சட்டத்தரணிகள் திரு மு. ஆலாலசுந்தரம் திரு ஆர். விஸ்வநாதன், திரு கே சற்குணநாதன் ஆகியோருடன். திரு ஆ. தரைராஜசிங்கம், திரு. தம்பு கந்தையா முதலியோரும் இலங்கைப்

[3 ம் பக்கம் பார்க்க]


## புனித பத்திரிசியார் கல்லூரி

கல்லூரியின் 3-ந் தவணைத் தொடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்.

யாழ்ப்பாணம். 6882



## வட இலங்கைச் சங்கீதசபை
## அறிவித்தல்

1977-ஆம் ஆண்டு ஆவணி புரட்டாதி மாதங்களில் நடாத்த ஒழுங்குசெய்துள்ள மேற்படி சபைச் சங்கீத பரீட்சைகள் (செயன்முறை, சாஸ்திரம்) மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது.

க. சிவநாதன்
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்,
வடமாநிலவித்தியாதிபதியும்.

சங்கீதசபை அலுவலகம்
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
22-8-1977. 6886



## யாழ்ப்பாணக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

நாட்டில் நிலவும் அசம்பாவிதங்கள் காரணமாக 24-8-1977 மாலை 4 மணிக்கு நடைபெறவிருந்த ஷ சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி நிலைமை சுமுகமானதும் அறிவிக்கப்படும்.

க. குணரத்தினம்
கௌரவ செயலாளர்.

வட்டுக்கோட்டை. 6879



## மலேஷியன் கைமார்
## சாம்பிராணி

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

ஈழத் தமிழர் நெருக்கடி:

# பாரத பிரதமருடன் தமிழக அரசு பேசவேண்டும்

## கலைஞர் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஆக. 22

"இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ளுமாறு சகல மாநிலங்களும் மத்திய அரசுக்கு ஒருமித்த குரலில் வேண்டுகோள் விடுக்கவேண்டும்".



இவ்வாறு தமிழ்நாடு அரசின் எதிர்க்கட்சித் தலைவரும் தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதி சகல மாநில அரசுகளையும் வேண்டியுள்ளார்.

இலங்கைத் தமிழ்மக்களின் இன்றைய நிலைகுறித்து இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயுடன் தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் திரு. கருணாநிதி தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய அரசுக்கு கோரிக்கை விடுவதுடன் மாநில அரசுகளும் இதுகுறித்து பரிசிலனை செய்ய வேண்டும் என்றும் திரு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## மூன்று வாலிபருக்கு பாளைக்கத்தி வெட்டு

### ஒருவர் நிலை மோசம்

யாழ்ப்பாணம், செவ்.

காங்கேசன்துறையில் நடைபெற்ற பயங்கர பாளைக்கத்தி வெட்டுச் சம்பவம் ஒன்றில் மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை அபாயகரமானதாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

காங்கேசன்துறைப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரு வாலிபர்களைத் தேடி வருகின்றனர். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் இச்சம்பவம் நடந்ததாம். (உ)

## 'சுட்டபின்னரும் மக்கள் அசையாமல் நின்றனர்'

### கான்ஸ்டபிள் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

"சுமார் 500 மக்கள் கூட்டமாக நின்று கடைகளுக்குத் தீமூட்டி, கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கடைகளில் உள்ள பொருட்களை எடுத்துச் சென்றுகொண்டிருந்தனர்."

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மூன்று பேர்களின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தசவர்த்தனவீரதுங்கா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது

#### "அழைப்பு ஒலி கேட்டது"

கான்ஸ்டபிள் வீரதுங்கா மேலும் கூறியதாவது:- 15ம் தேதி காலை யாழ். பொலிஸ் நிலையத்திற்குப் பின்னுளுள்ள வீட்டிலிருந்தேன். அழைப்பு ஒலி கேட்டதும் நான் பொலிஸ் நிலையம் சென்றேன். 'றிசேவ்' பொலிஸ் அங்கு இருந்தார். அவரின் பெயர் எனக்குத் தெரியவில்லை.

"யாழ்ப்பாண நகரத்தில் கலவரம் மூண்டிருப்பதாகவும், இன்ஸ்பெக்டர் கானுடன் செல்லுமாறும் கூறினார். நான் இன்ஸ்பெக்டர் கானுடன் ஒரு வானில் சென்றேன். கே. எஸ். கே. சந்தியில் வானை நிறுத்தினோம். இன்ஸ்பெக்டர் இரத்தினயக்காவுடன் 3 பொலிசார் சென்னர். ஆஸ்பத்திரிவீதி, கஸ்தூரியார் வீதிச்சந்திக்கு சென்றோம். அங்கு பெரும் சத்தம் ஒன்று கேட்டது. மக்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். நாங்கள் அந்தச் சந்தியில் வானை நிறுத்தினோம். இன்ஸ்பெக்டர் கான் எங்களை இறங்கும்படி கூறினார் நாங்கள் இறங்கினோம்.

"அங்கு 500 க்கு மேற்பட்ட மக்கள் கூட்டமாக நின்று கடைகளுக்குத் தீவைத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கடைகளிலுள்ள பொருட்களை எடுத்துச் சென்றுகொண்டிருந்தனர்.

நீதவான்; எத்தனை கடைகள் எரிந்து கொண்டிருந்தன?

எல்லாக் கடைகளும் எல்லாரும் கூட்டமாக நின்றனர். தனித்தனியாக என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று கூற முடியாது. நாங்கள் 45 யார் தூரத்தில் நின்றோம், கடைகளில் எடுத்த பொருட்களை அவர்கள் தீயில் போடவில்லை. எடுத்துச்சென்றுகொண்டிருந்தனர்.

#### 'கூட்டம் அஞ்சவில்லை'

'இன்ஸ்பெக்டர் கான் குண்டுகளைப்போட்டுத்தயாராகும்படி கூறினார். 5 பேர் தயாரானோம். அதற்கும் அக்கூட்டத்தினர் அஞ்சியதாகத் தெரியவில்லை. அவர்களில் எவ்வித மாற்றத்தையும் காணவில்லை. இன்ஸ்பெக்டர் கான் தமிழ் மொழியில் எச்சரிக்கை செய்தார். அதற்கும் கூட்டத்தினரில் எவ்விதமாற்றத்தையும் காணவில்லை. இச்சமயத்தில் கூட்டத்தினர் கற்களையும், போத்தல்களையும் எங்கள் மீது வீசினர்.

#### 'ஐந்து பேரும் சுட்டோம்'

"இன்ஸ்பெக்டர் எங்களை, கூட்டத்தை நோக்கி ஒரு முறை சுடுமாறு உத்தரவிட்டார். நாங்கள் சுடமுன்னர், அங்கு ஒரு வெடிச் சத்தம் கேட்டதும் 5 பேரும் ஒருதடவை கூட்டத்தை நோக்கிச் சுட்டோம். கூட்டத்தினர் சுட்டபின்னரும் அவ்விடத்தை விட்டுநகரவில்லை

'மீண்டும் குண்டுகளைப் போட்டு தயாராகும்படி இன்ஸ்பெக்டர் கூறினார். இரண்டாவது தடவையும் கூட்டத்தை நோக்கி சுட்டோம். இரண்டு பேர் விழுவதைக் கண்டேன். கூட்டத்தில் மற்றவர்கள் கலைந்து ஓடிவிட்டனர். விழுந்தவர்களில் ஒருவரை கூட்டத்தினர் தூக்கிச்சென்றனர். மற்றவர் அங்கு விழுந்து கிடந்தார். காயமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றனர்.

இறந்தவர்கள் நலனைக் கவனிப்பதற்காக சட்டத்தரணிகள் எஸ். நடராசா, ஜிம்மி ராசரத்தினம், ஆர். விஸ்வநாதன், எஸ். லோகேஸ்வரன், த. சோமசுந்தரம், கே. சற்குணநாதன், சிவா. கணேசன் ஆகியோர் ஆஜரானார்கள்.

பொலிஸ் தரப்பில் உதவி பொலிஸ் அதிபர் திரு. எம். எம். சில்வா கலந்துகொண்டார்.

விசாரணை இன்றுகாலை 10 மணிவரை பின்போடப்பட்டுள்ளது. (க)

## 3000-க்கும் அதிகமானோர் —

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக யாழ் வளாக மாணவர்களும் வரவேற்றனர். ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்த ஞாயிறன்றும் பலர் கண்டியில் இருந்தும் பிற இடங்களிலிருந்தும் அழைத்துவரப்பட்டனர். அல்கமுவவிலிருந்தும் பலர் வந்து சேர்ந்தனர்.

அகதிகளாக வந்தடைந்தவர்களுக்கு எவராவது உணவுப்பொருட்கள் வழங்கவிரும்பினால், வயல்ஸ் இளப்பைச் சேர்ந்த கஸ்தூரியார் வீதியிலுள்ள டாக்டர் யோகுபசுபதியிடம் கையளிக்குமாறு யன்ஸ் ஸ்தாபனத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### கண்டியில்

இதுவரை யாழ்ப்பாணத்திற்கு அகதிகளாக 3,000 க்கு மேற்பட்டவர்கள் வந்துள்ளனர். அனுராதபுரம் அகதிகள் முகாமில் எவரும் இல்லாதபோதும் கண்டியிலுள்ள கட்டுக்கலைப் பிள்ளையார் கோவிலில் 3,500 க்கு மேற்பட்டவர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனராம்.

இங்கு வந்து சேர்ந்தவர்களில் காயமடைந்திருந்த பதினைந்து அகதிகள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த சிலர் ஆபத்தான கட்டத்தையும் தாண்டிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### அனுராதபுரம் ஆஸ்பத்திரியில்

நேற்று காலை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் படுகாயமடைந்த நால்வரும் இப்போது ஆபத்தான நிலையைக் கடந்துவிட்டதாகத் தெரியவருகிறது. அனுராதபுரம் புகையிரத நிலைய அதிபர் சதாசிவம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரங்கநாதன், புகையிரதநிலையப் பிரதம கட்டுப்பாட்டாளர் செல்லத்துரை, லொறிச்சாரதி திருநாவுக்கரசு ஆகியோரே அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாகும்.

### கட்டுப்பெத்த மாணவர்

கட்டுப்பெத்த வளாக தமிழ் மாணவர்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பத்திரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் பேராதனை வளாகத்திலேயே தங்கியிருப்பதாகவும், வளாகத்தைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்றும் பேராதனை வளாகத்தைச் சேர்ந்த திரு. அதிகாரம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கு தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

குண்டசாலை விவசாயப்பாடசாலையைச் சேர்ந்த சில மாணவர்கள் யாழ். திரும்பிவிட்டனர்.

கிளிநொச்சியிலும் அகதிகள் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவர்களின் நலனை வவனியா எம். பி. கவனித்து வருகின்றார். (கா)

## 'ஈழநாடு' தேர்தல் போட்டி முடிவுகள்

'ஈழநாடு' ஸ்தாபனம் நடத்திய தேர்தல் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு:

**1-ம் பரிசு**

பி. யேசுதாஸராசன்,
கச்சேரி, மன்னார்.

**2-ம் பரிசு**

வி. சிவானந்தன்
சைவ பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி,

**3-ம் பரிசு**

இப்பரிசுக்கு இருவர் தெரிவாகினர். அவர்களின் விபரம் வருமாறு:

(1) கே. ரகுநாதன்,
5/1, குருசோல்ட் ஒழுங்கை,
சுண்டிக்குளி.

(2) வி ராஜசூரியர்,
சைவபாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

மூன்றுவது பரிசுத்தொகை வெற்றிபெற்றவர்களின் சம்மதத்துடன் இருவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

இவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் ஏற்பாடுகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

## 23 பேர் கைதானார்கள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண நகரில் இராணுவத்தினரால் 23 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்,

யாழ் நீதவான் திரு. கே. வி நவரத்தினம் முன்னிலையில் நேற்று இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தலா 250 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க)

## வாசகர் கவனத்திற்கு

கடந்த சில தினங்களாகவே, 'ஈழநாடு' பத்திரிகை வாங்குவதற்காக 'ஈழநாடு' காரியாலயத்தை மக்கள் முற்றுகையிட்டு வருகிறார்கள், வெளியிலும் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலுமே 'ஈழநாடு' ஏஜண்டுகளை 'ஈழநாடு' கேட்டு மக்கள் தொல்லை கொடுத்து வருவதாக ஏஜண்டுகள் அறிவிக்கிறார்கள். தவிர கிடைக்கும் 'ஈழநாடு' இதழ் ஒன்றை வைத்திருப்பவரைச் சுற்றிப் பலர் கூடி வாசிப்பதையும், 'ஈழநாடு எங்கே கிடைக்கும்' என்றுகேட்டு அலைந்து திரிபவர்களையும் நாம் பரவலாகக் காணக்கூடியதாயுள்ளது

நேற்று ஊரடங்குச் சட்டம் காரணமாக வேலைகள் தடைப்பட்டதால் நேற்றும் இன்றும் 'ஈழநாடு' வெளிவர முடியாதிருந்த போதிலும், ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் அதிகாலையிலிருந்தே மக்கள் வழமைபோலவே 'ஈழநாடு' தாகத்தால் அலையத் தொடங்கி விட்டனர்.

'ஈழநாடு' தன் அபிமான நிரந்தர வாசகர்களின் தொகைக் கேற்பவே அச்சிடப்படுகின்றது. சந்தாதாரர்களின் தொகைக் கேற்பவும் ஏஜண்டுகளின் தொகைக் கேற்பவுமே வாடிக்கையாளர்களின் தொகைக் கேற்பவுமே 'ஈழநாடு' அச்சான போதிலும் தேவையான போதெல்லாம் இயன்ற அளவு கூடுதல் இதழ்களை வாசக அன்பர்களின் நன்மை கருதி அச்சிட்டே வருகின்றோம். இதற்கு மேலும் நாம் சொல்வதானால 'ஈழநாடு' வாசிக்க விரும்பும் அன்பர்கள் நிரந்தர சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதன் மூலமோ 'ஈழநாடு' ஏஜண்டுகளிடம் தம்மைப் பதிவுசெய்துகொள்வதன் மூலமோ சுலபமாகவும் சிரமமின்றியும் 'ஈழநாடு' இதழைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது எமது கருத்து.

—(ஆ-ர்)

# யாழ். பஸ்சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

## சகலரையும் ஒத்துழைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வேலைக்குச் செல்லாதிருந்த அரசாங்க ஊழியர்களை இன்று வேலைக்குத் திரும்பிச் செல்லுமாறும், பொதுமக்களின் கஷ்டங்களை நீக்கும்பொருட்டு பஸ் ஊழியர்களை இன்று வேலைக்குச் செல்லுமாறும் பொலிஸ்-இராணுவ-கடற்படையினரால் எவ்வித தொல்லைகளும் ஏற்படாமல் கவனித்துக்கொள்வதாகவும் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி டி ஐ ஜி. திரு. ருத்ரா ராஜசிங்கம் நேற்று காலை அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் கேட்டுக் கொண்டார்.

இந்த மகாநாட்டில் பொலிஸ் அதிபர் திரு.சுந்தரலிங்கம், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பொதுமக்களின் கஷ்டங்கள் நீங்குவதற்கு அரசாங்க ஊழியரும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியரும் தங்கள் வேலைகளுக்கு உடனடியாகத் திரும்பிச் சென்று உதவ வேண்டுமென்றும் வர்த்தகர்களும் தங்கள் நிறுவனங்களைத் திறந்து உதவிசெய்ய வேண்டுமென்றும் இதேசமயம் பொதுமக்கள் பஸ் சேவைக்குத் தமது உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த மாநாட்டின் பின் பல்வேறு தொழிற் சங்கங்களும் கூடி ஆலோசனை நடத்தின. அரசாங்க ஊழியர்களும் பஸ் ஊழியர்களும் இன்று வேலைக்குத் திரும்புவர்.

மகாநாட்டில் கலந்து கொண்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகள் பலர் கடந்த சில தினங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் பற்றி எடுத்துக்கூறியதுடன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரையும் யாழ். மாவட்ட பொலிஸ் அதிபரையும் இடமாற்றம் செய்யவேண்டுமென்ற தமது கோரிக்கைகளையும் வலியுறுத்தினர்.

### விசாரணைக் கமிஷன் அறிக்கையின் பின்

யாழ். மாவட்ட சிவில் நிர்வாகத்துக்கும் பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளுக்கும் தாமே பொறுப்பாக இப்போது நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறிய இணைப்பு அதிகாரியான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ருத்ரா ராஜசிங்கம், அரசாங்க அதிபரையும் பொலிஸ் அத்தியட்சகரையும் மாற்றுவதற்குத் தமக்கு அதிகாரமில்லையென்றும் தெரிவித்ததாகத் தெரிகிறது. அரசாங்கம் நியமித்துள்ள விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியான பின் அரசாங்கம் இதுபற்றிப் பின்னர் முடிவு செய்யுமென்றும் இணைப்பு அதிகாரி கூறியதாகத் தெரிகிறது.

கடந்த சில தினங்களாக வேலைக்குச் செல்லாதிருந்த வங்கி ஊழியரும் இன்றுவேலைக்குத் திரும்புவார்கள்.

அரசாங்க ஊழியர், பஸ் ஊழியர், வங்கி ஊழியர் ஆகிய அனைவரும் உடனடியாக வேலைக்குத் திரும்பினும் சில ஊழியர்களுக்குத் தகவல் கிடைப்பதற்குத் தாமதமாகுமாதலால் புதன்கிழமை வரை அத்தகையவர்களுக்கு அவகாசம் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தபால் தந்தி ஊழியர்கள் நேற்று வழமைபோல் வேலை செய்தனர்.

## மரண அறிவித்தல்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை சபாநாயகம் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. சிதம்பரப்பிள்ளை சபாநாயகத்தின் அன்பு மனைவியாரும், கனகசுந்தரம் (தபால் சேமிப்பு வங்கி கொல்பிட்டி), சிதம்பரப்பிள்ளை (கைத்தொழில் இலாகா கொழும்பு), கனகலட்சுமி, சுகிர்தலட்சுமி ஆசிரியை (வட்டு இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகவதி, ஞானேஸ்வரி, குமாரவேல் (கமத்தொழில் திணைக்களம்) ஆகியோரின் மாமியாரும் ஆவர். ஈமக்கிரியை பற்றி பின்னர் அறிவிக்கப்படும். 6889

## பெருங்குளம் உற்சவம்

வேலணை, திங்கள்

நாட்டில் நிலவும் அசம்பாவிதங்கள் தொடர்பாக சென்ற 19-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த உற்சவம் பின் போடப்பட்டுள்ளது, அடுத்த மாதம் 18ம் திகதி உற்சவம் ஆரம்பமாகவிருப்பதாக ஆலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (அ)

## அரச ஊழியர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்கக் கோரியும் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், பொது மக்களதும் பாதிப்படைந்த மக்களதும் நலன்களைப் பேணும் வகையில் வேலைக்குத் திரும்பத் தீர்மானித்துள்ளோம். சகல ஊழியர்களும் வேலைக்குத் திரும்பும் பட்சத்தில் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.''

அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின் சங்கப் பிரதிநிதிகள் இம்முடிவுக்கு வந்துள்ளனர். தற்காலிகமாகவே இவ்வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதென்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர் 23ந் திகதி முதல் தமது சங்கங்களின் உறுப்பினர்கள் வேலைக்குத் திரும்புவரென்றும் தெரிவித்தனர்.

இத்தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெறுமென்றும் அவர்கள் தெரிவித்தனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஐந்து நாட்களும் லீவு நாட்களாகக் கருதப்படுமென்றும் அதிகாரிகள் தெரிவித்ததாக இப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## துப்பாக்கி...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டிருக்கிறது.

### கச்சேரியில் புகார் செய்யலாம்

யாழ்ப்பாணத்தில் பொலிசார் மற்றும் ஆயுதப்படைகளுக்கு எதிராகப் பொதுமக்கள் புகார் செய்வதற்கு வசதியாக யாழ்ப்பாணம் கச்சேரியில் உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு ஜயசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

### 2பொலிஸார் வெளியேறினர்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி முன்னர் வேறுகுற்றச்சாட்டுக்களின் மீது தற்காலிகவேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியதாகத் தெரிகிறது.

## யாருடைய சடலம்?

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமான ஒரு வாலிபரின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளது.

சுமார் 25-30 வயது மதிப்பிடத்தக்க மெல்லிய, கருமை நிறமுள்ள இவ்வாலிபர் யாரென்பதை உறவினர்களோ, நண்பர்களோ அடையாளம் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஐ)

## கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு!

கொழும்பு, திங்கள்

சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி பொலிசாருக்கும், ராணுவத்தினருக்கும் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

களவெடுத்தல், களவெடுக்க எத்தனித்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்யும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### வதந்தி பரப்புவோர்!

வதந்திகளைப் பரப்புவோரை கைதுசெய்யும்படி பொலிசார் பணிக்கப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் வதந்திகள் மூலமே பலவரம் மூண்டதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வதந்தி பரப்புவோர் பற்றி பொதுமக்கள் கவனமாக இருக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

# 'பொருளுடன் செல்பவர்களை சுட உத்தரவில்லை'

## மரணவிசாரணையில் கான்ஸ்டபிள் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

'துப்பாக்கிச் சூட்டுக்குப்பின் கூட்டத்தினர் கலைந்துசென்ற போது கொள்ளையடித்த பொருட்களையும் கொண்டு சென்றனர். அதன்பின்பு சுடுமாறு உத்தரவிடப்படவில்லை'

யாழ். கலவரத்தில் பலியானவர்களின் மரண விசாரணையில் யாழ் நீதவான் கே. வி. நவரத்தினத்தின் கேள்வியொன்றுக்கு சாட்சியமளித்த கான்ஸ்டபிள் வீரதுங்கா மேற்கண்டவாறு கூறினார்.

**நீதவான்:** அன்றிரவுமுழுவதும் உமது வீட்டிலேயே இருந்தீர்?–ஆம்.

**நீதவான்:** அழைப்புக் கிடைக்கும்வரை கலவரம்பற்றி உமக்கு எதுவுமே தெரியாது?–ஆம்.

**நீதவான்:** பொலிஸ் நிலையத்தில் றிசேவ் பொலிஸாருடன் வேறு யார் இருந்தனர்?– வேறு ஒருவர் இருந்தார்.

**நீதவான்:** வேறு இன்ஸ்பெக்டர் சார்ஜண்ட் இருந்தார்களா? ஞாபகமில்லை.

**நீதவான்:** றிசேவ்பொலிஸ் உத்தரவுப்படி நடந்தீர்?–ஆம்.

**நீதவான்:** நீர் அங்கிருந்து செல்லும்வரை உயர் அதிகாரிஎவரும் அங்கிருக்கவில்லை?–இல்லை.

**நீதவான்:** எதுக்காக நீங்கள் போவதாக இன்ஸ்பெக்டர் தான் சொல்லவில்லை?– அவர் முன்னுக்கு இருந்தார் நாங்கள் பின்னுக்கு இருந்தோம்.

**நீதவான்:** சந்தியில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது?–ஆம்.

**நீதவான்:** வீதியில் நெருப்பு எரிவது அசாதாரணமானது?–ஆம்.

**நீதவான்:** றிசேவ் பொலிஸ் என்ன கூறினார்?– யாழ்ப்பாணநகர் பற்றி எரிந்து கலவரம் நடப்பதாக கூறினார்.

**நீதவான்:** நீங்கள் போகும்போது வேறுஇடத்தில் நெருப்பு எரிவதைக்கண்டீரா?– காணவில்லை.

**நீதவான்:** எரியும் கடையில் சாமான்கள் இருந்ததா?– உள்ளே சாமான்கள் இருக்கவில்லை. கூட்டத்தினர் சாமான்களை எடுத்துச் சென்றனர்.

**நீதவான்:** பொலிஸ் அதிபர், உதவிப் பொலிஸ்அதிபர் அவ்விடத்திற்கு வரவில்லையா-பின்னர் வந்தனர்

**நீதவான்:** துப்பாக்கிச் சூட்டுக்குப் பின் கூட்டத்தினர் பொருள்களுடன்சென்றனரா?–ஆம்.

**நீதவான்:** அதன் பின் சுடும்படி உத்தரவு கிடைக்கவில்லையா?–இல்லை.

**நீதவான்:** என்னென்ன சாமான்கள்?– பார்சலாகக் கொண்டுசென்றனர்.

**நீதவான்:** பொருள்கள் கொண்டுபோகும்போது சுடும்படி உத்தரவிடப்படவில்லையா?–இல்லை.

**நீதவான்:** கூட்டத்தினர் கொள்ளையடிக்கப்பட்ட சாமான்களை கொண்டுபோனபோது எதுவும் செய்யவில்லையா?– இல்லை.

**நீதவான்:** நீர் அக்கடைக்குச் சென்றபோது வழியில் பழைய மார்க்கட் என்ன நிலைமையில் இருந்தது?– நான் அதைப் பார்க்கவில்லை.

**நீதவான்:** நீர் சம்பவம் நடந்த இடத்திற்கு செல்லு முன்னர் வேறு இடத்தில் எரிவதைக் கண்டீரா?– நான் பார்க்கவில்லை.

**நீதவான்:** சம்பவத்தின் பின் நீர் அங்கு நின்றபோது அதனைக் கவனிக்கவில்லையா?– சந்திக்கு வந்தபின் தெரியும்!

இன்றையப் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் சில செய்திகள் நேற்றைய ''ஈழநாடு'' பத்திரிகையின் (சில பதிப்புகளில்) வெளிவந்திருந்தன.

**பொருள் சிப்பம் செய்து அனுப்புவதற்கான ஒப்பந்தகாரர்**

காங்கேசன்துறை துறைமுகத்தில் நிற்கும் கப்பலுக்கு பெருந்தொகையில் உப்பை சிப்பம்செய்து, கொண்டு சென்று ஏற்றுவதற்கு நன்கு ஸ்தாபிதமுள்ள ஒப்பந்தக்காரர்கள் தேவை. சகல மதிப்பீடுகளையும் (பொலிதீன் உறைகளுடனான சாக்குவகைகள், சிப்பம் செய்யும் கூலி [illegible] செல்லும் செலவு உட்பட) குறிப்பிட்டு விண்ணப்பம் செய்க.

தகவல்களுக்கு:-

282, கிராண்ட்பாஸ் வீதி — கொழும்பு-14

தொலைபேசி: 24203 (6880)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka